# Post- Maintenance Rights for Muslim Women in Sri Lanka

M.M. Shiyana[1] & S.M.M. Nafess[2]

[1]Assistant Lecturer, Dept. of Islamic Studies, South Eastern University of Sri Lanka
[2] Senior Lecturer, Dept. of Islamic Studies, South Eastern University of Sri Lanka
shiyana@seu.ac.lk

**ஆய்வு சுருக்கம்**

விவாகரத்தினை தொடர்ந்து ஒரு முஸ்லிம் பெண்ணுக்கு பராமரிப்பை வழங்குவது தொடர்பில் பல விவாதங்களும் விமர்சனங்களும் வெளிவந்த வண்ணமுள்ளன. இருப்பினும் சில நாடுகள் விவாகரத்துக்கு பிந்தைய பராமரிப்பினை வழங்குவது தொடர்பில் வித்தியாசமான சட்ட ஏற்பாடுகளையும் கொண்டுள்ளன. இந்நிலையில் இவ்வாய்வானது தற்போதைய இலங்கை முஸ்லிம் தனியார் சட்டத்தின் கீழ் விவாகரத்தான பெண்களுக்குரிய பராமரிப்பு உரிமைகள் குறித்த சட்ட நிலையை மதிப்பிடுகிறது. பண்புரீதியான இவ்வாய்வுக்குரிய கோட்பாட்டு ரீதியிலான தகவல்களைப் பெற இலக்கிய மீளாய்வுகள் பகுப்பாயப்பட்டு விவரிக்கப்பட்டுள்ளன. பல முஸ்லிம் நாடுகளில் பெண்களுக்கு விவாகரத்துக்கு பிந்தைய பராமரிப்பானது குறிப்பிட்ட காலத்துக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இலங்கை பொதுச்சட்டத்தின் கீழ் விவாகரத்தின் போது பெண்களுக்குரிய நிவாரணத்தை பெற்றுக் கொடுப்பதற்கான பரந்த தற்றுணிவு இலங்கை நீதிமன்றங்களுக்கு இருப்பதனால் விவாகரத்தின் போதைய தீர்வுகளாக மொத்தப்பணம், மாதாந்த வருடாந்த கொடுப்பனவுகள் அல்லது சொத்து உரிமை மாற்றம் என்பன வழங்கப்படுகிறது. இலங்கையில் விவாகரத்துப் பெற்ற ஒரு முஸ்லிம் பெண் இத்தா காலத்தின் போது தாபரிப்பை பெற உரித்துடையவளாக கருதப்பட்டாலும் இவ்வுரிமை காதி நீதிபதியின் தற்றுணிவின் அடிப்படையிலேயே அமைந்துள்ளதுடன் ஒன்றிணைந்து வாழ்தலை காரணமின்றி கைவிட்ட பெண்ணுக்கு தாபரிப்பு உரிமை வழங்கப்படுவதில்லை. எனினும் சட்டத்தின் பிரிவு 47 (1) (எ) இல் ஒரு மனைவியின் அல்லது விவாகரத்தான மனைவியின் பிரசவச் செலவுக்கான கோரிக்கை பற்றியும் பிரிவு 47 (1) (இ) இல் நெறிமுறையான மற்றும் நெறிமுறையற்ற பிள்ளைக்குரிய பராமரிப்பு தொடர்பிலும் சட்டயேற்பாடுகள் காணப்படுகின்றன. எனினும் MMDAயின் கீழ் விவாகரத்துக்கு பிந்தைய பராமரிப்பு தொடர்பில் சட்டயேற்பாடுகள் இல்லாதது பெண்களுக்கு நிதி உதவிகளை இல்லாமல் செய்ய வழிவகுக்கிறது. இலங்கை முஸ்லிம் தனியார் சட்டத்தில் விவாகரத்துக்குப் பிந்தைய பராமரிப்பு தொடர்பில் சட்ட சீர்திருத்தங்கள் தேவை என்பது அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், சட்ட வரைவுதாரர்களும் பெண் நலன்சார் அமைப்புகளும் இவ்விடயத்தை கவனத்திற் கொள்வதுடன் இது தொடர்பில் எதிர்காலத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளல் போன்ற பரிந்துரைகளையும் இவ்வாய்வுக்கட்டுரை வலியுறுத்துகிறது.

**திறவுச் சொற்கள்**

பராமரிப்பு, மதாஹ், முஸ்லிம் பெண்கள், முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டம்

## 1. ஆய்வுப் பின்னணி

1948 ஆம் ஆண்டின் உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனம் அல்லது பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் அகற்றுவதற்கான மாநாட்டிற்கு நீண்ட காலத்திற்கு முன்பே இஸ்லாம் அதன் பல்வேறு ஆதாரங்களின் மூலம் சமூகத்தில் ஒரு பெண்ணுக்கான உரிமைகளை வழங்கியிருக்கின்றது. சமகாலத்தில் பல முஸ்லிம் நாடுகளிலுள்ள பராமரிப்பு சட்டங்களும் இஸ்லாமிய தனிப்பட்ட சட்டங்களும் வெவ்வேறுபட்டதாக அமைகின்றன. இந்நிலையில் சில நாடுகளின் மத அரசியலமைப்பு மற்றும் சட்டக்கட்டமைப்புகள் என்பன பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான பாதுகாப்பினை வழங்க அரசை கட்டாயப்படுத்துகின்றன. இருப்பினும் விவாகரத்துக்கு பிந்தைய பராமரிப்பை

பெண்களுக்கு வழங்குவதற்கான கேள்வி வரும்போது ஆணாதிக்க கருத்துக்கள் மற்றும் நீதி விளக்கங்கள் மூலம் அவை நீடிக்கப்படுகின்றன அல்லது மறுக்கப்படுகின்றன (அஜீஸா, 2012). இஸ்லாமிய சட்டத்தில் பராமரிப்பு என்பது நபக்கா என்று அழைக்கப்படுகிறது. இது ஒரு கணவர் தனது மனைவி அல்லது மனைவிகளுக்கு வழங்க வேண்டிய நிதியுதவியினைக் குறிக்கிறது (பர்வின், 2014). இதன்படி உணவு, மருந்து, உடை மற்றும் உறைவிடம் போன்றன அடிப்படையில் பராமரிப்புகளாக விளங்குகின்றன (சூளனி,2009). பராமரிப்பானது திருமணம், பிரிவினை அல்லது விவாகரத்து போன்ற சில சூழ்நிலைகளின் போது செய்ய வேண்டிய கடமையின் கீழுள்ளது (அஜீஸா, 2012). மேலும் தலாக் கூறப்பட்ட பெண்களுக்கு முறைப்படி பராமரிப்புப் பெறத் தகுதியுண்டென்பதால் அவர்களை பராமரிப்பது இறையச்சமுடையவர்கள் மீது கடமையாகும் என அல்குர்ஆன் (2:241) குறிப்பிடுகின்றது. இப்பராமரிப்பு தொடர்பான வசனத்தை இஸ்லாமிய நாடுகள் இரண்டு விதமாக பொருள்கோடல் செய்துள்ளன. ஒன்று இத்தா காலம் முடியும் வரையான பராமரிப்பும் மற்றொன்று விவாகரத்தின் போது மொத்தமாக வழங்கப்படும் ஜீவனாம்சத் தொகையான மதாஹ் எனும் பராமரிப்பாகும் (ஹஸனா, 2015). இஸ்லாத்தில் மதாஹ் என்பது கணவனைப் பிரிந்த மனைவிக்கு கணவனினால் வழங்கப்படும் நிதி இழப்பீடாகும். ஷாபிஈ, மாலிகி மற்றும் ஹன்பலி பள்ளிகளின் கருத்தின்படி மதாஹ்வானது தலாக் அல்லது பஸஹ் விவாகரத்து பெற்ற பெண்ணுக்கு வழங்கப்படும் மொத்தப்பணம் அல்லது இழப்பீட்டு நன்கொடை எனக் கருதப்படுகிறது. (சூளனி, 2009).

ரஹ்மான் மற்றும் யூனுஸ் (2018) ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் விவாகரத்துக்கு பிந்தைய பராமரிப்பு தொடர்பில் இஸ்லாமிய ஷரிஆ சட்டங்கள் நீதிமன்ற தீர்ப்புகளில் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு பங்களாதேஷ், பாகிஸ்தான் மற்றும் இந்திய நீதிமன்ற வழக்குகளும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. ரைஹானா, தஸ்லிமா (2015) மேலும் பலரினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் ஜீவனாம்சம் தொடர்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில வழக்குகள் பகுப்பாயப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன. ஆயிஷாவினால் (2018) மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வில் பாகிஸ்தான் மற்றும் ஈரானில் முஸ்லிம் பெண்களுக்கு விவாகரத்துக்கு பிந்தைய பராமரிப்பு உரிமைகள் சமகால மனித உரிமைகளுடன் ஒப்பிடப்பட்டுள்ளன. மேலும் மத்தாஹ்வானது திருமண கால அளவு, வழக்கு உண்மைகள், விவாகரத்து சூழ்நிலைகள் மற்றும் கணவரின் நிதி ஸ்திரத்தன்மை ஆகியவற்றுடன் தொடர்புடையதாக கருதப்பட்டாலும் அது பெண்களுக்கு நியாயமான அளவில் வழங்கப்பட வேண்டும். திருமணத்திலும் விவாகரத்தின் போதும் பெண்களுக்கு நிதிப்பாதுகாப்பு வழங்குவது இஸ்லாமிய கொள்கைகளுக்கு அந்நியமானதல்ல. 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் அல் தாஹிர் அல் ஹதாத் மஹ்மூத் ஷாலுத் மற்றும் முகமது அல்-கஸ்ஸாலி ஆகிய அறிஞர்கள், நீதிபதிகள் சுயாதீனமாக எடுக்கக் கூடிய சட்ட சீர்திருத்தத்தங்கள் பெண்களின் நிலையை மேம்படுத்தும் என வலியுறுத்தினார்கள். எனவே அல்குர்ஆனின் 241 வது வசனம் எந்த நேர வரம்பையும் நிர்ணயிக்கவில்லை என்று சிலர் வாதிடுகிறார்கள். மேலும் இமாம் அல் பக்ருதின்-அர்ராஸி அவர்களின் பார்வையில் மதாஹ் கட்டாயமாக கருதப்படுகிறது. அல்-ஹிதாயா (1152-1197) மற்றும் பத்தாவா-இ ஆலம்கிரி ஆகிய (1890) ஹனபி மத்ஹப் நூல்களில் கணவரின் சமூக மற்றும் நிதி சூழ்நிலைகளின் அடிப்படையில் மனைவியின் பராமரிப்பு தீர்மானிக்கப்பட வேண்டும் என்பதோடு இத்தாக் காலத்துக்குப்பின் பராமரிப்பு கட்டணம் செலுத்த அனுமதியில்லை என்கிறது (பர்வின், 2014). எனவே இஸ்லாமிய ஷரிஆவின் கீழ் இத்தா காலத்தைத் தாண்டி விவாகரத்துக்குப் பிந்தைய மதாஹ்வினை அனுமதிப்பது குறித்து இஸ்லாமிய அறிஞர்கள் மத்தியில் கருத்து வேறுபாடுகள் இருப்பதால் விவாகரத்துக்கு பிந்தைய மதாஹ் வழங்குவதில் சிக்கல்கள் உள்ளதாக அறிய முடிகிறது. ஆனாலும் பல நாடுகளின் பரந்துபட்ட நீதித்துறை செயல்பாட்டின் கீழ் இத்தகைய பராமரிப்பு அனுமதிக்கப்படுகின்றது (ரஹ்மான், 2018). ஈரான், கத்தார், எகிப்து போன்ற நாடுகளில் பெண்களுக்கான விவாகரத்துக்கு பிந்தைய பராமரிப்பு குடும்ப சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. (பிரிவு 115 குடும்ப சீர்திருத்தக் குறியீடு 2005). 1951 ஆம் ஆண்டு 13ஆம் இலக்க இலங்கை முஸ்லிம் தனியார் சட்டத்தில் (MMDA) பராமரிப்பு தொடர்பில் சட்ட ஏற்பாடுகள் நிலையானதாக காணப்பட்டிருப்பினும் விவாகரத்து செய்யப்பட்ட பெண்ணுக்கு மதாஹ் வழங்குதல் MMDA யின் கீழ் சட்ட அங்கீகாரம் பெறவில்லை. எனினும் சில சூழ்நிலைகளின்

கீழ் அவை வழங்கப்படுவதாகவும் அறியமுடிகிறது. (சூளனி, 2009). இலங்கையிலுள்ள ஒரு சில காதி நீதிமன்றங்களில் பராமரிப்பு தொடர்பிலான நடைமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும் பெரும்பாலான காதி நீதிமன்றங்களில் பராமரிப்பு தொடர்பில் ஒரு சில சட்டங்கள் முறையாக நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பதனால் தாபரிப்புக்கான கோரிக்கையை மேற்கொள்ளும் முஸ்லிம் பெண்களும் பிள்ளைகளும் பெரிதும் பாதிக்கப்படுவதாக அறியமுடிகிறது (சலீம், 2001). இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள முஸ்லிம் தனியார் சட்டம் குர்ஆனிய அடிப்படையை திருத்தமாகக் கொண்டு அமையவில்லை (சலீம், 1983). போன்ற பல பின்னணிகளின் கீழ் இலங்கை முஸ்லிம் தனியார் சட்டத்தின் கீழ் முஸ்லிம் பெண்களுக்கான விவாகரத்துக்கு பிந்தைய பராமரிப்பு இத்தா காலத்திற்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருப்பதும் அதன் பிற்பாடு பெண்களுக்கான பராமரிப்பு (மதாஹ்) தொடர்பில் எவ்வித சட்ட ஏற்பாடுகள் இல்லாதிருப்பதும் இவ்வாய்வின் ஆய்வுப் பிரச்சினையாகவுள்ளது. எனவே இது தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்வது அவசியமாகும்.

## 2. ஆய்வு நோக்கம்

MMDAயின் கீழ் விவாகரத்துக்கு பிந்தைய நிதி இழப்பீடு (மதாஹ்) தொடர்பான சட்ட நிலையையும் இது தொடர்பில் ஏனைய நாடுகளிலுள்ள குடும்ப சட்டயேற்பாடுகளையும் ஆராய்வதோடு மதாஹ் வழங்குதல் தொடர்பில் தற்போதைய MMDAயில் சட்டதிருத்தங்களை மேற்கொள்ள பரிந்துரை செய்தலும் இவ்வாய்வின் நோக்கங்களாகவுள்ளன.

## 3. ஆய்வு முறை

பண்பு ரீதியான இவ்வாய்வுக்குரிய கோட்பாட்டு ரீதியான அம்சங்களைப் பெறுவதற்காக இரண்டாம் நிலைத்தரவுகளாக பராமரிப்பு தொடர்பான குடும்ப சட்ட விதிகள், உள்நாட்டுச் சட்டங்கள், இதழியல்கள், நூல்கள், இணையத்தள வெளியீடுகள் என்பன மீயாள்வுக்குட்படுத்தப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டு விவரிக்கப்பட்டுள்ளன.

## 4. ஆய்வின் கண்டறிதல்கள் மற்றும் பெறுபேறுகள்

### 4.1. முஸ்லிம் நாடுகளில் விவாகரத்துக்கு பின்னரான பராமரிப்பு

உலகெங்கிலும் உள்ள பல முஸ்லிம் நாடுகள் பெண்களின் உரிமையை இரண்டு விதிகள் மூலம் பாதுகாத்துள்ளன. ஒன்று மதா எனப்படும் விவாகரத்துக்கு பிந்தைய பராமரிப்பும் மற்றையது விவாகரத்துக்கு பிந்தைய நிதிப்பாதுகாப்பில் பெண்களுக்கான பங்கு இணைக்கப்பட்டுள்ளதுமாகும். விவாகரத்து செய்யப்பட்ட மனைவிக்கு வாழ்நாள் முழுவதும் அல்லது அவளின் மறுமணம் வரை அல்லது பகுதி பகுதியாக அல்லது ஒரு முறை மொத்தமாக வழங்குவதனை மதாஹ் (இழப்பீட்டு நன்கொடை) குறிக்கிறது. இதன் படி விவாகரத்து நேரத்தில் கணவனிடம் இருந்து சொத்துக்களை பெறுவது மனைவியின் உரிமையாகக் கருதப்படுகின்றது. விவாகரத்துக்கு பிந்தைய நிதிப்பாதுகாப்பில் பெண்களுக்காக இணைக்கப்பட்டுள்ள பங்கு திருமண சொத்து எனப்படுகின்றது. ஒரு பெண் குடும்ப நீதிமன்றங்களுக்கு சென்று அவளது தனிப்பட்ட சொத்துக்களையும் உடமைகளையும் மீட்பதற்காக ஒரு வழக்கு தாக்கல் செய்ய முடியும். இவ்வாறான உரிமை கோரல்களை நீதிமன்றங்கள் உறுதி செய்துள்ளன. துருக்கியின் சிவில் கோட் பிரிவு 202 இன் படி திருமணத்தின் போது கையகப்படுத்தப்பட்ட எந்தவொரு சொத்தும் இயல்பாகவே கூட்டாக இருக்க வேண்டும் என கருதப்படுகிறது. இந்தோனேசியாவின் திருமணச் சட்டம் (1974) திருமணத்திற்குள் கொண்டுவரப்பட்ட சொத்துக்கள் அல்லது பரிசுகள் என்பன இருவரால் வாங்கப்பட்ட கூட்டுச் சொத்தாக கணிக்கப்படுகின்றது. இதேபோல் தூனிசிய மற்றும் மலேசிய குடும்பச் சட்டங்களும் ஒரு பெண்ணின் திருமணத்தின் போது வாங்கிய சொத்தைப்

பெறுவதற்கான உரிமையை வழங்குகின்றன (CEDAW Committee in its 75th session 15th-28th February 2020).

மொராக்கோ, கத்தார், சிரியா, துனிசியா, துருக்கி, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் யெமன் உள்ளிட்ட முஸ்லிம் சட்ட அதிகார வரம்புகள் மாதாஹ் தொடர்பான கட்டாய ஏற்பாடுகளைக் கொண்டுள்ளன. அவை பெரும்பாலும் பார்ட்டி பரிசு என்று குறிப்பிடப்படுகின்றன. எகிப்தில் கணவனின் நிதி நிலைமை மற்றும் திருமணத்தின் கால அளவினை பொறுத்து குறைந்தபட்சம் விவாகரத்துக்கு பிந்தைய இழப்பீடு விவாகரத்தான பெண்ணுக்கு இரண்டு வருடங்களுக்கு வழங்கப்படுகிறது (Article 18 of the Law no. 100 of 1985). தூனிசியாவில் விவாகரத்தின் போது கணவனோ அல்லது மனைவியோ இழப்பீட்டு பணம் செலுத்த வேண்டும் என சட்டத்தில் குறிப்பிடப்படுகிறது. எனினும் ஒரு மனைவிக்கான இழப்பீடு அவள் மறுமணம் செய்யும் வரையோ சொந்தமாக உழைக்கும் வரையோ அல்லது அவள் இறக்கும் வரையோ வழங்கப்படலாம் (Tunisian Law of Personal Status 1956 Article 31). கட்டார் நாட்டில் விவாகரத்துக்கு பிந்தைய பராமரிப்பு மூன்று ஆண்டுகளுக்கு பெண்களுக்கு வழங்கப்படுகிறது (Section 115 of the Family Reform Code 2005). மேலும் மொரோக்கோவில் விவாகரத்தானது ஒருதலைப்பட்சமாகவோ அல்லது பரஸ்பர இணக்கத்தின் அடிப்படையிலோ செய்யப்பட்டாலும் மனைவிக்கான ஆறுதல் பரிசு வழங்கப்படுகிறது (Moroccan Family Code 2004). ஜோர்தானில் ஒரு கணவனினால் தன்னிச்சையாக அல்லது ஒருதலைப்பட்சமாக விவாகரத்து செய்யப்பட்டாலும் அதிகபட்ச இழப்பீடு ஒரு வருடத்திற்கு மட்டுமே வழங்கப்படுகிறது (Article 134 of the Jordanian Family law of Personal Status). துருக்கியின் சிவில் கோட் நிலையின் படி வாழ்க்கைத்துணை மறுமணம் செய்யும் வரை அல்லது வேறொருவருடன் ஒன்றாக வாழும் வரை அல்லது காலவரையற்ற காலத்திற்கு ஜீவனாம்சம் வழங்க அனுமதிக்கப்படுகிறது. மலேசியாவில் நியாயமான காரணங்களின்றி விவாகரத்து செய்யப்பட்ட மனைவிக்கு இத்தா தாபரிப்புக்கு மேலதிகமாக இழப்பீட்டு நன்கொடை வழங்கப்படுகிறது (Section 56 of the Islamic Family Law (Federal Terries) Act 1984). இன்னும் இந்தோனேசியாவில் ஒரு திருமணம் நடைமுறையில் இருக்கின்ற போது சம்பாதிக்கப்படும் சொத்துக்கள் கணவன் மற்றும் மனைவி ஆகிய இருவரினதும் சொத்துக்களாக கணிக்கப்பட்டு விவாகரத்தின் போது பங்கிடப்படுகிறது (1974-1975 இந்தோனேசிய திருமண சட்டப் பிரிவு 35-37). பாகிஸ்தானில் விவாகரத்து பராமரிப்புக்கு அனுமதி இல்லையெனினும் பாகிஸ்தானிய சட்ட ஆணையம் மீண்டும் இது தொடர்பில் பரிந்துரைத்துள்ளது. இன்னும் சிரியாவில் விவாகரத்தான முஸ்லிம் பெண்களின் சமூக நிலையைப் பொறுத்தும் மனைவிக்கு ஏற்படும் துன்பத்தின் அளவைப் பொறுத்தும் மூன்று ஆண்டுகளுக்கு மத்தாஹ் வழங்கப்படுகின்றது (Article 117 of the Syrian Law of Personal Status 1975). யெமன் நாட்டின் தனிப்பட்ட நிலைச் சட்டத்தின் பிரிவு 71 இன் படி மத்தாஹ்வானது கணவரின் சூழ்நிலைகளைப் பொறுத்து ஒரு வருடத்திற்கு வழங்கப்படுகின்றது (Article 71 of the Yemeni law of Personal Status).

### 4.2. இலங்கை பொதுச்சட்டத்தின் கீழ் விவாகரத்துக்கு பின்னரான தாபரிப்பு

ஒரு மனைவி தன் கணவனுடன் வாழ்ந்த காலத்தில் போதுமான அளவு பராமரிக்கப்படாத நிலையில் அதற்கான நிவாரணத்தை கோர உரிமையுண்டு. இன்னும் விவாகரத்தின் போது பெண்களுக்குரிய உரிமை மற்றும் நிவாரணத்தை பெற்றுக் கொடுப்பதற்கான பரந்த தற்றுணிவு இலங்கை நீதிமன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது (1899ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க சட்டம், திருத்தப்பட்ட 1977 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க குடியியல் நடைமுறை சட்டக்கோவை பிரிவு 615). இலங்கை பொதுச்சட்டத்தின் கீழ் விவாகரத்து தொடர்பான பராமரிப்பு பின்வருமாறு வருகிறது:

விவாகரத்து நடவடிக்கைகள் நிலுவையில் உள்ள வாழ்க்கைத் துணைக்கு ஜீவனாம்ச ஆதரவு கொடுப்பனவுகள் (Alimony pendente lite) மற்றும் நிரந்தர ஜீவனாம்சம் என்பன வழங்கப்படுகிறது. ஜீவனாம்ச பெண்டென்ட் லைட்டில் தங்களுக்கு நிதி உதவி தேவை என்பதை வாழ்க்கைத் துணையாளர் நீதிமன்றம் முன் நிரூபிக்க வேண்டும். இதன்படி

நீதிமன்றம் நியாயமானதாகக் கருதும் எந்தவொரு தீர்வையோ, நீதிமன்றம் நியாயமானதாகக் கருதும் மொத்த தொகையை செலுத்தவோ, அசையாச் சொத்தின் உறுதிமொழி பத்திரத்தை நிறைவேற்றுவது தொடர்பிலோ, நீதிமன்றம் பொருத்தமாகக் கருதும் வேறு எந்த நிறுவனத்திடமிருந்து கொடுப்பனவுகளை வாங்கவோ அல்லது வருடாந்த மாதாந்த தொகையை செலுத்தவோ உத்தரவிடலாம் (kamanthi,2017). இவ்வாறு விவாகரத்தின் போது பெண்களுக்குரிய உரிமை மற்றும் நிவாரணத்தை பெற்றுக் கொடுப்பதற்கான பரந்த தற்றுணிவு இலங்கை நீதிமன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் முஸ்லிம் பெண்களுக்கு அத்தகைய உரிமை தற்போதைய தனியார் சட்டத்தில் இல்லை. எனவே ஒரு முஸ்லிம் பெண்ணுக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும்.

### 4.3. MMDA யின் கீழ் மனைவிக்கான பராமரிப்பு

பராமரிப்பினைக் குறிக்க அரபியில் நபக்கா எனும் பதம் கையாளப்படுகிறது. நபக்கா என்பது ஒருவர் தனது உழைப்பைக் கொண்டு மற்றவரின் வாழ்க்கைத் தேவைகளுக்குரிய ஏற்பாடுகளை செய்வதாகும். இஸ்லாமிய சட்டத்தின்படி ஒரு முஸ்லிம் கணவர் தனது மனைவியை பராமரிக்கும் பொறுப்பில் இருக்கிறார். எந்தவொரு சட்ட ரீதியான காரணங்களும் இன்றி ஒருவர் தன் மனைவியை பராமரிக்க மறுத்தலோ அல்லது புறக்கணித்தாலோ அக்கணவனுக்கு எதிராக அப்பெண் வழக்குத் தாக்கல் செய்யலாம் அல்லது திருமணத்தைக் கலைக்க கோரலாம். கணவனினால் சரியாக பராமரிக்கப்படாமையானது விவாகரத்துக்குரிய வலிதான காரணமாக கொள்ளப்படுகிறது (சூளனி, 2009).

இலங்கையில் திருமணம் தொடர்பான சட்ட அமைப்பானது பொதுச் சட்டம் மற்றும் தனிப்பட்ட சட்டங்களினால் ஆளப்படுகின்றது. திருமணம் மற்றும் விவாகரத்து தொடர்பான விடயங்களில் முஸ்லிம்கள், முஸ்லிம் தனியார் சட்டத்தின் கீழ் நிர்வகிக்கப்படுகின்றார்கள். இலங்கை முஸ்லிம் தனியார் சட்டத்தின் 1951 ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க முஸ்லிம் திருமணம் மற்றும் மண நீக்கச்சட்டத்தின் பிரிவு 47 (1) இன் படி மனைவி மற்றும் பிள்ளை அல்லது அவர்களின் சார்பில் கோரப்படும் பராமரிப்பினை பெற்றுக்கொடுக்கும் நியாயாதிக்கம் காதி நீதிமன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இலங்கையில் பெரும்பாலும் காதி நீமன்றங்களுக்கு செய்யப்படும் பராமரிப்பு விண்ணப்பங்கள் பிள்ளைகளின் பராமரிப்பு தொடர்பானவையாக இருக்கின்றன (சலீம், 2008). MMDA சட்டத்தின் பிரிவு 47 (1) (ஆ,ஈ) என்பவற்றில் மனைவிக்கான பராமரிப்பு தொடர்பில் சட்ட ஏற்பாடுகள் காணப்படுகின்றன. விவாகரத்து செய்யப்பட்ட மனைவி பராமரிப்பு கோரக்கூடிய இச்சட்டத்தின் பிரிவு 47 (1) (எ) இல் ஒரு மனைவியின் அல்லது விவாகரத்தான மனைவியின் பிரசவச் செலவுக்கான கோரிக்கை பற்றியும் பிரிவு 47 (1) (இ) இல் நெறிமுறையான மற்றும் நெறிமுறையற்ற பிள்ளைக்குரிய பராமரிப்பு தொடர்பிலும் சட்ட ஏற்பாடுகள் காணப்படுகின்றன (MMDA 1951 Amended in 2006). பராமரிப்பு தொடர்பிலான வழக்கில் மத்தியஸ்தர்களின் பிரசன்னமில்லை எனும் விடயம் குறித்து எழும் வாதங்களை காதிகள் சபை இலேசாக நிராகரித்துள்ளதனை பரீத் எதிர் ஜெசீமா (1967) MMDR V 63,64 எனும் வழக்கில் காணலாம்.

விவாகரத்துக்குப் பிறகு பராமரிப்பு முஸ்லிம் தனிப்பட்ட சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்படவில்லையாயினும் விவாகரத்து செய்யப்பட்ட மனைவி பராமரிப்பு கோரக்கூடிய மூன்று சூழ்நிலைகளை வழங்குகிறது. இதன்படி விவாகரத்து பதிவு செய்யும் வரையும் இத்தாவின் போதும் (விவாகரத்து செய்யப்பட்ட மனைவி திருமணமாகாமல் இருக்க வேண்டிய குறிப்பிட்ட காலம்) அத்தகைய பெண் கர்ப்பமாக இருந்தால் குழந்தையை பிரசவிக்கும் வரையுமாக உள்ளது. ஒரு மனைவி தனக்கான வருமான வழியைக் கொண்டிருக்கின்ற போதிலும் அவள் மீதான கணவனின் பொறுப்பு அவளது வருமானத்தில் எத்தகைய செல்வாக்கினையும் செலுத்தாது. ஜிப்ரி எதிர் உம்மு ஆயிஷா 1958 4 MMDR 154 எனும் வழக்கில் கணவனினால் வழங்கப்பட வேண்டிய பராமரிப்பு தொகையை தீர்மானிக்கும் போது மனைவியின் வருமானவழி கருத்திற் கொள்ளப்படவில்லை. எனினும் ஒன்றிணைந்து வாழ்தலை காரணமின்றி கைவிட்ட பெண்ணுக்கு தாபரிப்பு உரிமை வழங்கப்படுவதில்லை என நீதிமன்றங்கள் பொருள்கோடல் செய்துள்ளன. 1951 ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 47

(1) (g) யின் படி திருமணம் நடைமுறையில் இருக்கும் போது பிள்ளைப்பேறு காலச் செலவுக்கான கோரிக்கையை விடுப்பதற்கு அம்மனைவிக்கு அனுமதியுண்டு. 1951 ஆம் ஆண்டு 36 ஆம் பிரிவின் படி தாபரிப்பு தொடர்பில் நீதிபதியின் கட்டளை விண்ணப்பித்த திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது. Kameer vs siththi zain 1955 4 MMDR 92 எனும் வழக்கில் ஒரு பெண் தான் முன்னர் வாழ்ந்த காலத்தில் சரியாக தாபரிக்கப்படாத போதும் அதற்கான தாபரிப்பை கோர முடியாது என தீர்ப்பளிக்கப்பட்டது. எனினும் மகரூப் எதிர் சாதுல் நயிமா 1951 3 MMDR 123 எனும் வழக்கில் ஷாபிஈ சட்டப் பிரகாரம் கடந்த காலத்துக்குரிய தாபரிப்பை வழங்குதல் நியாயமானது என நீதிமன்றம் கருதியது. தாபரிப்பின் அளவை கூட்டும் அல்லது குறைக்கும் அதிகாரம் காதி நீதிபதிக்கு வழங்கப்பட்டு இருப்பதனால் சில சமயங்களில் பெண்கள் நிதி ரீதியாக பாதிக்கப்படக்கூடிய நிலை ஏற்படலாம்.

### 4.4. MMDA யின் கீழ் விவாகரத்துக்கு பின்னரான தாபரிப்பு

விவாகரத்துக்கு பிந்தைய பராமரிப்பு மதாஹ் எனப்படுகிறது. மதாஹ் தொடர்பில் அல்குர்ஆனின் சூறா பகராவின் 49, 236, 241 போன்ற வசனங்களில் குறிப்பிடப்படுகிறது. மதா என்ற அரபு சொல் மொழியியல் ரீதியாக இன்பம், இன்பம், மகிழ்ச்சி, திருப்தி ஆகியவற்றைக் குறிக்கிறது (பர்வின், 2014). இஸ்லாத்தில் மதா என்பது கணவனைப் பிரிந்த மனைவிக்கு கணவனினால் வழங்கப்படும் நிதி இழப்பீடாகும். இது தலாக், குலா மற்றும் ஒருவகை பஸஹ் பிரிவினைகளின் போது செலுத்தப்பட வேண்டும். இலங்கையில் உள்ள பெரும்பான்மையான முஸ்லிம்கள் ஷாபிஈ சட்டத்தை பின்பற்றக் கூடியவர்களாக உள்ளனர். ஷாபிஈ சிந்தனைப் பிரிவின் படி பஸஹ் பிரிவினைக்கு கணவன் மட்டுமே காரணமாக இருந்தால் (விசுவாச துரோகம், இயலாமை) மதாஹ் கட்டயாமாகும் எனக் கருதப்படுகிறது (சலீம்,2017). இலங்கையில் விவாகரத்துப் பெற்ற ஒரு முஸ்லிம் பெண் இத்தா காலத்தின் போது தாபரிப்பை பெற உரித்துடையவளாக கருதப்படுகிறாள். எனினும் இவ்வுரிமை நீதிபதியின் தற்றுணிவின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது. பஸஹ், குலா விவாகரத்துகளின் போது இத்தா தாபரிப்புக்கான கோரிக்கையை விடுக்கலாம். இத்தா காலத்திற்குள் அப்பெண் வேறொரு திருமணம் செய்ய முடியாது. அவ்வாறு அவள் செய்தால் தாபரிப்பு பெறும் உரிமையிலிருந்து நீக்கப்படுகிறாள். விவாகரத்தை தொடர்ந்து இத்தா காலத்தினுள் வழங்கப்படுகின்ற தாபரிப்பானது முஸ்லிம் பெண்களை பொறுத்தவரை போதுமானதாகயில்லை (சூளனி 2009). விவாகரத்து பெற்ற பெண் எவ்வளவு காலத்துக்கு தாபரிக்கப்பட வேண்டும் என்பதில் அல்குர்ஆன் தெளிவாக கூறாவிட்டாலும் அவள் தாபரிப்பை பெற உரிமை உடையவள் என்பது தெளிவானது. இதன்படி விவாகரத்து பதிவு செய்யப்படுவதற்கு மூன்றுமாத இத்தா காலத்தை விடவும் அதிக காலம் எடுக்கலாம் என்பது மறைமுகமாகத் தோன்றுகிறது. பெண்கள் கல்வி கற்றவர்களாக அல்லது ஏதாவது தொழில் திறமைகளை கொண்டிராத நிலைகளில் விவாகரத்து செய்தவர்களாக இருக்குமிடத்தில் அவர்கள் பொருளாதார வாழ்வில் கஷ்டப்படக்கூடும். எனவே மேற்குறித்த நாடுகளில் விவாகரத்துக்கு பிந்தைய பராமரிப்பு தொடர்பில் நீதித்துறை பரந்துபட்ட தற்றுணிவை கொண்டு செயற்பட்டு இருப்பது பெண்களின் உரிமைகளை பாதுகாக்கும் ஒரு அம்சமாக விளங்குகின்றது. இத்தகைய சூழலில் ஒரு ஏழைப் பெண் நிதி சார்ந்த பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க முடிவதோடு தனது தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளவும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது.

### 5. முடிவுரை

பல நாடுகள் நீதித்துறை செயல்பாட்டின் மூலம் பெண்களுக்கான விவாகரத்துக்கு பிந்தைய தாபரிப்பை நீட்டிக்கும் ஒழுங்குகளை பொருள்கோடல் செய்துள்ளன. MMDA யில் பெண்களுக்கான மதாஹ் தொடர்பில் எந்தவொரு சட்ட ஏற்பாடும் இல்லாதது அவர்களுக்கு நிதி உதவியை இல்லாமற் செய்கிறது. பொதுச்சட்டத்தின் கீழ் பெண்கள் பெறும் உரிமைகளை முஸ்லிம் பெண்களும் பெற வேண்டும். எனவே முஸ்லிம் பெண்களின் நிதி ஆதரவுக்கான ஒரு சிறந்த சட்ட அமைப்பை MMDA வழங்க வேண்டுமானால் பெண்கள் தொடர்பில் கவனிக்கப்பட வேண்டிய சிக்கல்களை முன்னிலைப்படுத்தல் அவசியமாகும். திருமணத்தை முடித்துக்கொள்வதன் மூலம் கணவனால் மனைவிக்கு வழங்கப்படும் ஒரு ஆறுதலான கொடுப்பனவு என்பதற்கு மதாஹ்வின் வரையறையை பிரிவு 27 (தலாக்) அல்லது 28 (2) (குலா) போன்ற பிரிவில் சேர்ப்பதன் மூலம் பிரிவு 97 திருத்தப்பட வேண்டும். இலங்கை முஸ்லிம் பெண்களுக்கு விவாகரத்துக்கு பிந்தைய தாபரிப்பினை நீட்டிக்கும் ஒழுங்குகளை சட்டத்தில் ஏற்படுத்தல். முற்றும் முஸ்லிம் குடும்ப சட்டத்தின் கீழ் பெண்கள் நலன்கள் மற்றும் உரிமைகள் தொடர்பில் எதிர்காலங்களில் ஆய்வுகளை மேற்கொள்ளல். மேலும் மஹர் விடயத்தை முஸ்லிம்கள் மத்தியில் மீள்வலியுறுத்தல் போன்ற பரிந்துரைகளையும் இவ்வாய்வு முன்மொழிகிறது.

**உசாத்துணைகள்**


சூளனி.(2009).*இலங்கையின் முஸ்லிம் குடும்பச் சட்டம் கொள்கை, நடைமுறை மற்றும் பெண்கள் தொடர்பான அக்கறைக்குரிய விடயங்கள்.* கொழும்பு: முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி.

சலீம்.(2008).*இலங்கையில் காழி நீதிமன்ற முறைமையும் முஸ்லிம் பெண்கள் மீதான அதன் தாக்கமும்,* கொழும்பு: முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி.

ஹஸனா.(2015).*இஸ்லாமிய நோக்கில் பால்நிலை சமத்துவம் மற்றும் சமநீதி முஸ்லிம் விவாகம், விவாகரத்துச் சட்டமும் இஸ்லாமிய சட்டமும்.* கொழும்பு: இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் மன்றம்.

Abbasi, M.Z. women's rights to unilateral no fault based divorce in Pakistan and india. *Jjindal Global Law Review 7, 81-95* (2016).

Aishwarya. Maintenance For Muslim Women In India. *International Journal of Advanced Research* (2016). Volume 4. Issue 5. 1503-1510

Ayesha Shahid .Post-Divorce Maintenance Rights For Muslim Women In Pakistan And Iran: Making The Case For Law Reform. *Muslim world journal of human rights* 15 (1) 59-98 (2018)

Dalia Pervin. (2014). Post-Divorce Maintenance for Muslim Women: Which path to follow in Bangladesh? *Society & Change.* Vol. VIII, No. 1.

Fauzia. Thematic report on the issue of financial protection upon divorce muslim women's right under family law in Pakistan. Article 16

Kamanthi vakrama. (2017).feb.16. Maintenance Under the Sri Lankan law. Retrived from http://life.dailymirror.lk/article/style/Divorce-Laws-in-Sri-Lanka/53/16602 **Maintenanceandsupportlaws**http://www.helplinelaw.com/article/sri%20lanka/167#:~:text

Rahman, Md & Mohammad, Hossain & Sirazi, H. M. (2018) .Post-Divorce Maintenance (MAA'TA) For Muslim Women in Bangladesh, Pakistan and India. 0837/10.9790

Raihanah, Taslima, Fuadah and Wirdati. Financial support for women under Islamic family law in Bangladesh and Malaysia. *Asian Journal of Women's Studies*. 2015. Vol. 21, No. 4, 363–383.

Sleem marsoof. (2017) Report of the committee appointed to consider amendments to the muslim marriage and divorce act vol 1. Retrived from https://www.academia.edu/38033559/report_of_the_committee_appointed_to_c

Women Living Under Muslim Laws- Dossier 22: Post Divorce Maintenance for Muslim Women and the Islamist Discourse- Retrived from http://www.wluml.org/node/334